முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2015 யூலை

## (AA23) வியாபாரச் செயற்பாடுகளும் முகாமைத்துவமும்

(Business Operations and Management)

2015-08-01
பிற்பகல்
[2.00 – 5.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**
  (1) ***நேரம் :*** *03 மணித்தியாலம்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***
  (3) *பரீட்சைக்கு விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே*** *உங்களுக்குத் தரப்பட்ட* ***விடைப் புத்தகத்தில் விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்க. ஏதாவது எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு வினைச் சொல் உள்ளடங்கியிருக்கிறது. (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பன்னிரெண்டு (12) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*இலக்கம்* ***1.1*** *இலிருந்து* ***1.11*** *வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவுசெய்யப்பட்ட விடைக்குரிய இலக்கத்தை வினாவுக்குரிய இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் துணைச் சேவைகளைச் (auxiliary services) சரியாக உள்ளடக்கியுள்ள தொகுதி எது?

(1) வணிகவியலும் வங்கியியலும்

(2) போக்குவரத்தும் ஏற்றுமதியும்

(3) காப்புறுதியும் தொடர்பாடலும்

(4) களஞ்சிய முகாமைத்துவமும் மொத்த விற்பனை வணிகமும் (01 புள்ளி)

**1.2** ஒரு தனியார் கம்பனி தொடர்பில் பின்வருவனவற்றுள் சரியானது எது?

(1) பங்குதாரர்களின் ஆகக் கூடிய எண்ணிக்கை ஏழு.

(2) பணிப்பாளர்களின் ஆகக் குறைந்த தொகை இரண்டு.

(3) நிதிக் கூற்றுக்களை வெளியிடுவது கட்டாயமில்லை.

(4) பங்குகளை மாற்றிக்கொள்ள (Transfer) எதுவித தடைகளும் இல்லை. (01 புள்ளி)

**1.3** நிலவுகை நோக்கத்தின் (purpose of the existence) அடிப்படையில் ஒரு தனியார் துறை வியாபார நிறுவனத்தினை ஒரு அரசாங்கத் துறை வியாபார நிறுவனத்திலிருந்து வேறுபடுத்த முடியும். அரசாங்கத் துறை நிறுவனங்களின் நிலவுகையின் பிரதான நோக்கமாவது,

(1) சந்தைப் பொருளாதாரத்தின் சீரான செயற்பாட்டிற்குத் தேவையான சேவைகளை வழங்குதல்

(2) உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல்

(3) அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்தல்

(4) தனியுரிமைச் சந்தைகளைக் கட்டுப்படுத்தல் (02 புள்ளிகள்)

**1.4** **வரையறுக்கப்பட்ட XYZ** எனும் நிறுவனத்தின் உற்பத்திக்கான கேள்வி மிகவும் பலமாகக் காணப்படுகின்ற **X** நாட்டில், வரையறுக்கப்பட்ட **XYZ** நிறுவனம் தொழிற்படுகிறது. இருந்த போதும் **XYZ** நிறுவனம் தனது உற்பத்திப் பிரிவில் ஒரு கடுமையான பணியாளர் பற்றாக்குறைக்கு முகங்கொடுக்கின்றது. இதற்காக தந்திரோபாயத் திட்டமிடலில் பின்வருவன வற்றில் எந்தச் சுற்றாடலை கவனத்தில் எடுப்பது சாத்தியமானதாக இருக்கும்?

(1) வெளிவாரிச் சுற்றாடல் (2) வெளிநாட்டுச் சுற்றாடல்

(3) பெரும்பாகச் சுற்றாடல் (4) உள்வாரிச் சுற்றாடல் (02 புள்ளிகள்)

**1.5** பின்வருவனவற்றுள் நுண் சுற்றாடலின் (Micro Environment) ஒரு ஆக்கக்கூறு (component) **அல்லாதது** எது?

(1) வாடிக்கையாளர்கள் (2) போட்டியாளர்கள்

(3) வழங்குநர்கள் (4) அரசியல்வாதிகள் (01 புள்ளி)

**1.6** பின்வருவனவற்றுள் போட்டரின் பெறுமதிச் சங்கிலிக்கிணங்க (Porter’s Value Chain) ஒரு பிரதான செயற்பாடாக (Primary activity) அமைவது எது?

(1) மனித வள முகாமைத்துவம் (2) நிறுவனத்தின் உட்கட்டமைப்பு

(3) பெறுகை (Procurement) (4) உள்வரும் வழங்கல் (Inbound Logistic)

(02 புள்ளிகள்)

**1.7** தொக்கு முகாமைத்துவம் (Inventory Management) தொடர்பாக பின்வருவனவற்றுள் சரியானது எது?

(1) தொக்குகளை அடிக்கடி கண்காணித்தலானது தொடர்ச்சியான தொக்கு முகாமைத்துவ முறைமையின் ஒரு பண்பியல்பு (feature) **அல்ல.**

(2) தொக்கு இருப்பினை பதிலீடு செய்தலுடன் (replacing) இணைந்ததான கிரயங்கள் காவும் கிரயங்கள் (carrying costs) என அழைக்கப்படும்.

(3) சிக்கனக் கட்டளைக் கணியமே (Economic Order Quantity-EOQ), காவும் கிரயம் மற்றும் கட்டளையிடல் கிரயம் ஆகியவற்றின் மொத்தத்தை இழிவளவாக்குகின்ற உத்தம கட்டளை அளவு ஆகும்.

(4) பாரம்பரிய தொக்கு முகாமைத்துவ முறைமையின் ஒரு அனுகூலமே குறைவான களஞ்சியக் கிரயமாகும். (02 புள்ளிகள்)

**1.8** பின்வருவனவற்றுள் ஒரு நிறுவனத்தின் உள்ளக ஊழியர்களிடையே தகவல்கள் / சம்பவங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப வளங்களின் பாவனையை அனுமதிப்பது எது?

(1) முகாமைத்துவத் தகவல் முறைமை (2) அக இணையம் (Intranet)

(3) இணையம் (Internet) (4) புற இணையம் (Extranet) (02 புள்ளிகள்)

**1.9** ‘‘ஊழியர்கள் மற்றும் தொழிலாளர் உறவுகள் (Employee and Labour Relations) க்கு உரித்தான செயற்பாட்டை பின்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க.

(1) மனிதவலுத் திட்டமிடல் (2) வெகுமதி முகாமைத்துவம்

(3) ஒழுக்கநெறி முகாமைத்துவம் (4) வினையாற்றுகை மதிப்பீடு

(02 புள்ளிகள்)

**1.10** ஆயுள் காப்புறுதிப் பத்திரங்களுக்கு (life insurance policies) பிரயோகிக்கக்கூடியதான காப்புறுதி எண்ணக்கரு பின்வருவனவற்றுள் எது?

(1) நட்ட உத்தரவாதம் (Indemnity) (2) கடன் பற்றுரிமை மாற்றீடு (Subrogation)

(3) பங்களிப்பு (Contribution) (4) மீயுயர் நம்பிக்கை (Utmost good faith)

(02 புள்ளிகள்)

**1.11** SWOT பகுப்பாய்வு கவனத்தில் எடுக்கின்ற வெளிவாரிக் காரணிகள்,

(1) வாய்ப்புகளும் பலவீனங்களும் (2) பலங்களும் பலவீனங்களும்

(3) வாய்ப்புகளும் அச்சுறுத்தல்களும் (4) அச்சுறுத்தல்களும் பலவீனங்களும்

(02 புள்ளிகள்)

*கீழ்வரும் வினாவுக்கு உமது விடைப் புத்தகத்தில் சுருக்கமானதொரு விடையை, வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.12** மனித வள முகாமைத்துவச் (HRM) செயற்பாடுகளின் நோக்கத்தினை (scope) மூன்று அம்சங்களாக (aspects) வகைப்படுத்த முடியும். அவற்றுள் ஆளணி (Personnel) மற்றும் நலன்புரி (Welfare) என்பன இரு அம்சங்களாகும். மனித வள முகாமைத்துவச் செயற்பாட்டின் மற்றைய அம்சத்தின் பெயரை எழுதுக. (01 புள்ளி)

*பகுதி A முடிந்தது*

## பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

**வினா 02**

"வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இலக்குகளை அடைவதற்கு எந்த ஒரு நிறுவனத்துக்கும் முகாமைத்துவம் முக்கியமானது".

முகாமைத்துவத்தின் பிரதான எண்ணக்கருக்கள் மூன்றினைச் (03) சுருக்கமாக **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

**வினா 03**

"காப்புறுதியானது இடர் முகாமைத்துவத்தின் ஒரு வழிமுறை ஆகும். காப்புறுதிக் கம்பனிகள், தமது இடர்களை (risk) முகாமை செய்யத் தேவையான நபர்களுக்கு காப்புறுதிப் பத்திரங்களை வழங்குகின்றன".

''மீள் காப்புறுதி (Re-insurance) என்ற எண்ணக்கருவைப் பொருத்தமான உதாரணத்துடன் **கூறுக.** (05 புள்ளிகள்)

**வினா 04**

"தரத்திற்கான மிகவும் உயர் முக்கியத்துவமானதும் கட்புலனாகக்கூடியதுமான அணுகுமுறையை மொத்த தர முகாமைத்துவம் (TQM) கொண்டிருக்கிறது. அது தர மேம்பாட்டிற்கான ஒரு யப்பானியப் பாணி முகாமைத்துவ அணுகுமுறையாக தோற்றுவிக்கப்பட்டு, 1990 களில் மிகவும் பிரபல்யமடைந்தது."

மொத்த தர முகாமைத்துவத்தின் (TQM) ஏதேனும் ஐந்து (05) கோட்பாடுகளை **நிரற்படுத்துக**. (05 புள்ளிகள்)

**வினா 05**

**ZED வியாபாரக் கல்லூரி** என்பது கல்விக் கைத்தொழில் துறையில் இயங்குகின்ற புதிதாக கூட்டிணைக்கப்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாகும். ஆகவே, நிறுவனத்தின் மனித வளங்கள், கல்லூரியின் சக்தி வாய்ந்த (energetic) வளங்களுள் ஒன்றாக இனங்காணப் பட்டன. இருப்பினும் **ZED வியாபாரக் கல்லூரியானது** அதன் கல்விசார் ஊழியர்களின் செயலாற்றுகையை (performance) கண்காணிப்பதற்கு முறையானதொரு கணிப்பீட்டு முறைமையை அமுல்படுத்தியிருக்கவில்லை. எனவே, ''பணிப்பாளர்கள் சபையானது'' செயலாற்றுகைக் கணிப்பீட்டின் முறையானதொரு செயன்முறையை (process) விருத்தி செய்யத் தீர்மானித்தது.

உங்களை **ZED வியாபாரக் கல்லூரியின்** மனித வள நிறைவேற்று உத்தியோகத்தராகக் (Human Resource Executive) கருதி, நிறுவனத்தின் மனிதவள முகாமையாளர் ஒரு வினைத்திறன்மிக்க செயலாற்றுகைக் கணிப்பீட்டு முறைமை (Effective Appraisal System) மீதான முன்மொழிவைத் தயாரிக்குமாறு உங்களிடம் கேட்டுள்ளார்.

**ZED வியாபாரக் கல்லூரிக்காக** நீங்கள் முன்மொழிகின்ற செயலாற்றுகைக் கணிப்பீட்டு முறைமையின் முக்கிய குணாம்சங்களை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 06

இன்றைய வியாபாரச் சூழலில் இயங்குகின்ற வியாபார நிறுவனங்கள் தங்களது வியாபார நடவடிக்கைகளை இணையத்தினூடாக (via internet) உலகம் முழுவதும் நடத்துகின்றன. ஆகையால், இணையமானது வியாபார நடவடிக்கைகளுக்கு வசதிகளை அளிப்பதில் இன்றியமையாததொரு வகிபாகத்தை ஆற்றுகின்றது.

இன்றைய சுறுசுறுப்பான வியாபாரச் சூழலில் இயங்குகின்ற வியாபார நிறுவனம் ஒன்றுக்கு இணையத்தினால் கிடைக்கின்ற ஐந்து (05) நன்மைகளை **நிரற்படுத்துக.**

(05 புள்ளிகள்)

*பகுதி B முடிந்தது*

# பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

ஆட்டோமொபைல் கைத்தொழிலில் இயங்குகிற ஒரு முன்னணி கார் தயாரிப்பாளர்களே **மக்ரோ** நிறுவனத்தினர். ஆண்டொன்றிற்கான கட்டளையிடல் கிரயமானது (Ordering cost) கட்டளை ஒன்றுக்கு ரூ.10 மில்லியனாகவும் காவும் கிரயமானது ரூ.500,000/- ஆகவும் இருக்கிறது. கார்களுக்கான வருடாந்தக் கேள்வி 2,250 கார்களாக எதிர்வுகூறப்பட்டிருக்கிறது.

**மக்ரோ** நிறுவனமானது இருப்பினை முகாமை செய்வதற்கு பாரம்பரிய தொக்கு முகாமைத்துவ முறைமையைப் பயன்படுத்துகிறது. இருந்தபோதும், அண்மையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உற்பத்தி முகாமையாளர் தற்போது நடைமுறையிலுள்ள முறைமையைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை. எனவே, சரியான நேரத்தில் (Just in time - JIT) என்னும் ஒரு வித்தியாசமான முறைமையை பணிப்பாளர் சபைக்கு கூட்டமொன்றில் முன்மொழிந்தார். மேலும், அவர் தனது தெரிவை நியாயப்படுத்தி டொயோட்டா போன்ற சர்வதேச ரீதியில் வெற்றிபெற்ற ஆட்டோ மொபைல் கம்பனிகளின் உதாரணங்களை மேற்கோள் காட்டினார். அதன் பின்பு பணிப்பாளர் சபை, இரண்டு இருப்பு முகாமைத்துவ முறைமைகள் மீதும் அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும்படி அவரைக் கேட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை,**

(a) பாரம்பரிய தொக்கு முகாமைத்துவ முறைமைக்கும் JIT முறைமைக்கும் இடையிலான வேறுபாடுகளை **இனங்காண்க**.

(04 புள்ளிகள்)

(b) பின்வருவனவற்றைக் கணிக்க :

(i) கட்டளை அளவு (Order Size)

(ii) ஆண்டொன்றுக்கு தேவைப்பட்ட கட்டளைகளின் எண்ணிக்கை

(iii) வருடாந்த காவும் கிரயம்

(iv) வருடாந்த கட்டளையிடல் கிரயம் (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 08

**D & D** என்பது கொழும்பு நகர எல்லைக்குள் இயங்குகின்ற நடுத்தர அளவிலான ஒரு விளம்பரக் கம்பனியாகும். இந்நிறுவனம் ஊழியர்களை முகாமை செய்வதன் முக்கியத்துவத்தை உணர்ந்த படியால் அண்மையில் மனித வள முகாமைத்துவத் திணைக்களத்தை நிறுவியது.

ஆற்றல் முகாமைத்துவ எண்ணக்கருக்களை இக்கம்பனிக்கு அறிமுகப்படுத்துமாறு பணிப்பாளர் சபை புதிதாக நியமிக்கப்பட்ட மனித வள முகாமையாளரைக் கேட்டது.

***நீங்கள் செய்ய வேண்டியவை,***

(a) ஆற்றல் முகாமைத்துவத்தின் பிரதான அம்சங்களைக் (aspects) **கூறுக.** (02 புள்ளிகள்)

(b) **D & D** இற்கு ஆற்றல் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை மெய்ப்பித்துக் காட்டுவதற்காக அறிக்கை ஒன்றைத் **தயாரிக்குக**. (08 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 09

வேக இணைய தொடுப்பு (faster internet connectivity) மற்றும் சக்தி வாய்ந்த தொடரறா கருவிகள் (powerful online tools) ஆகிய கண்டுபிடிப்புகளின் பெறுபேறாக கம்பனிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் பல நன்மைகளை வழங்கிய இலத்திரனியல் வர்த்தகம் (E-commerce) என அழைக்கப்பட்ட ஒரு புதிய வர்த்தக யுகம் உருவானது. இருந்தபோதிலும், அது பல பிரச்சினைகளுக்கும் ஏதுவாயிருந்தது.

***நீங்கள் செய்ய வேண்டியவை,***

(a) இலத்திரனியல் வர்த்தகத்தின் நான்கு (04) வகைகளை தெளிவாகக் காட்டுவதற்கு (Illustrate) வரைபடம் ஒன்றை **வரைந்து,** ஒவ்வொரு வகைக்கும் உதாரணம் ஒன்று வீதம் **கூறுக**. (04 புள்ளிகள்)

(b) இலத்திரனியல் வர்த்தகத்தின் பிரதிகூலங்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிந்தது*

# **<u>பகுதி D</u>**

ஒரு (01) கட்டாய வினா

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 10

**X** நாட்டினது குடிபானக் கைத்தொழிலில் பிரதான வகிபாகத்தை வகிக்கும் நிறுவனமே **KIK குரூப்** ஆகும். கம்பனியின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்கின்ற பலமான, ஒருமுகப்படுத்தப்பட்ட ''ஆய்வு மற்றும் அபிவிருத்தி'' திணைக்களம் ஒன்றை அது கொண்டிருந்தது. அண்மையில், **X** இன் மக்கள் உடன் குடிப்பதற்கான தயார்நிலைப் பழச்சாறுகளை அனுபவிக்க விரும்புகின்றமையை அது கண்டுபிடித்தது. மென்பானங்கள் குடிப்பதை விட அது அதிக ஆரோக்கியமானதாகக் கருதப்பட்டது. சாத்தியவள ஆய்வை நடத்தியதன் பின்பு, பணிப்பாளர்கள் சபை பழச்சாறுகளைத் தயாரிக்கத் தீர்மானித்தது.

**KIK** நிறுவனத்தால் தயாரிக்கப்படும் புதிய பழச்சாற்றிற்கான வணிகக் குறிப் பெயர் (Brand name) “Juzzy” என்பதாகும். ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களின் தேவைகளைத் திருப்திப்படுத்துவதன் மூலம் புதிய உற்பத்தி மூலமாக இலாபங்களைச் சம்பாதிப்பதற்கு சபை எதிர்பார்த்திருந்தது.

ஒரு வாரத்திற்கு முன்பு, மாம்பழம், தோடம்பழம், அப்பிள் மற்றும் பழக்கலவை என்ற நான்கு வித்தியாசமான சுவைகளில் Juzzy உள்ளூர் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. போக்குவரத்துக் கிரயத்தைக் குறைக்கும் பொருட்டு, பண்ணைகள் (1000 விவசாயிகள்) மற்றும் தொழிற்சாலை (2500 ஊழியர்கள்) என்பன ஒரே புவியியல் பிரதேசத்தில் அமைக்கப்பட்டன. தொழிற்சாலை வெளியீட்டகம் (factory outlet) பண்ணைகளுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டது. இது தயாரிப்புச் செயன்முறைகளைச் செய்து காட்டும் ஒரு மாதிரி வெளியீட்டகம் ஆகும். இங்கு வருகை தரும் வாடிக்கையாளர்கள் Juzzy இன் தயாரிப்புச் செயன்முறையின் உண்மையான அனுபவத்தைப் பெற முடியும். Juzzy, 120 மில்லிலீற்றர் பக்கற்றுகளிலும் 500 மில்லிலீற்றர் போத்தல்களிலும் சந்தைக்கு அனுப்பப்படுகின்றது. சந்தையைக் கைப்பற்றுவதற்காக போத்தல்கள் ஒரு கவர்ச்சிகரமான முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தன.

உற்பத்தியானது **KIK** நிறுவனத்தின் வழங்கல் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுவதோடு அவை நாடு முழுவதிலும் கிடைக்கக் கூடியதாகவும் உள்ளன. வாடிக்கையாளர்கள் நியாயமான ஒரு விலையில் தரப்பட்ட எந்தவொரு விற்பனை மையத்திலும் உற்பத்தியை வாங்கக்கூடியதாக உள்ளது. தொகையான கொள்வனவிற்கு விற்பனையாளர்களிடமிருந்து கவர்ச்சியான கழிவுகளும் தரப்பட்டன.

செவிப்புல, கட்புல, மின்னஞ்சல் மற்றும் தொடரறா ஊடகங்கள், விசேடமாக சமூக ஊடகங்கள் வழியாக புதிய உற்பத்தியின் நுழைவிற்கான சந்தைப்படுத்தல் நடவடிக்கை வெற்றிகரமாக தொடர்பாடல் செய்யப்பட்டது. **KIK** நிறுவனம் நாட்டின் ஆரோக்கியம் விரும்பும் வாடிக்கையாளர்களை பிரதானமாக இலக்கு வைத்தது. வாடிக்கையாளர்கள் தமது சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ள ஊட்டச்சத்து நிபுணர்களை (Nutritionist) நாள் முழுவதும் தொடர்பு கொள்ளக் கூடியதான ‘ஹெல்ப்லைன்’ (helpline) வசதி செய்யப்பட்டிருந்தது. **X** இன் குடிமக்கள் அனுமதி பெற்று தொழிற்சாலையைப் பார்வையிட முடியும். அங்கே பண்ணைகள் மற்றும் தொழிற்சாலையைப் பார்வையிடுவதுடன் விவசாயிகள் மற்றும் வேலையாட்களைச் சந்திக்கவும் முடியும். அதற்கும் மேலாக அவர்கள், ஊழியர்களுக்கு நடத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் வேலைப்பட்டறைகளையும் கண்டுணர முடியும். **KIK** முகாமைத்துவமானது இந்த ஆண்டில் 100 இற்கு அதிகமான, விசேடமாக பாடசாலைகளிலிருந்து தொழிற்சாலையைப் பார்வையிட கோரிக்கைகள் கிடைத்துள்ளதாக அண்மையில் அறிவித்துள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை,**

(a) **KIK குரூப்** இன் “Juzzy” தொடர்பில் சந்தைப்படுத்தல் கலவையின் (7p’s மாதிரி) வித்தியாசமான மூலகங்களை (elements) **விளக்குக**. (10 புள்ளிகள்)

(b) உள்ளூர் சந்தையில் Juzzy ஐ நிலைப்படுத்திட **KIK** நிறுவனத்திற்கு கிடைக்கக்கூடிய நிலைப்படுத்தல் தந்திரோபாயங்கள் நான்கினை (04) உதாரணங்களுடன் **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

(c) சந்தைப்படுத்தல் தத்துவங்கள் (Marketing philosophies) ஐந்தினை (05) சுருக்கமாக **விளக்கி**, **KIK** இன் Juzzy இற்குப் பொருத்தமான தத்துவத்தை **அடையாளம் காண்க**. (07 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிந்தது*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |